Malai Malar / மாலை மலர்

2 NOV 2025



புதுவை பல்கலைக்கழக துணைவேந்தருக்கு

# வாழ்நாள் சாதனையாளர் விருது

புதுச்சேரி, நவ.2—

புதுவை மத்திய பல்கலைக் கழகத்தின் உயிரி தகவலியல் துறை மற்றும் மருந்து கண்டுபிடிப்புச் சங்கம் ஆகியவை இணைந்து புதுமையான மருந்து வடிவமைப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டை நடத்தின.

மாநாட்டில் நரம்பியல் மற்றும் மருந்து கண்டுபிடிப்பு துறையில் கல்வி மற்றும் அறிவியல் தலைமை மற்றும் ஆராய்ச்சியில் செய்த சிறந்த பங்களிப்புக்காக துணைவேந்தர் பிரகாஷ் பாபுவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. பல்கலைக் கழகத்தின் உயிரி தகவலியல் துறையின் தலைவர் பேராசிரியர்கள் கிருஷ்ணா, தினகரராவ், அமெடா, பசந்த் குமார் திவாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Dinamani / தினமணி

2 NOV 2025

# புதுவை பல்கலை. துணைவேந்தருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



புதுவை மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் விழாவில் பங்கேற்றோர்.

புதுச்சேரி, நவ.1: புதுவை மத்திய பல்கலைக்கழகத் துணைவேந்தர் பிரகாஷ் பாபுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. புதுவை மத்திய பல்கலைக் கழகத்தின் உயிரி தகவலியல் துறை மற்றும் உயிரி தகவலியல் மற்றும் மருந்து கண்டுபிடிப்புச் சங்கம் இணைந்து புதுமையான மருந்து வடிவமைப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டை நடத்தின.

நரம்பியல் மற்றும் மருந்து கண்டுபிடிப்பு துறையில் கல்வி மற்றும் அறிவியல் தலைமை மற்றும் ஆராய்ச்சியில் சிறந்த பங்களிப்புக்காக துணைவேந்தர் பிரகாஷ் பாபுவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. உயிரி தகவலியல் மற்றும் மருந்து கண்டுபிடிப்பு சங்கம் இந்த விருதை வழங்கியது. பல்கலைக் கழகத்தின் உயிரி தகவலியல் துறையின் தலைவர் ஆர். கிருஷ்ணா, பேராசிரியர்கள் ஏ. தினகர ராவ், வி. அமௌடா, பசந்த் குமார் திவாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Daily Thanthi / தினத்தந்தி

2 NOV 2025




# பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாநாடு

## துணைவேந்தருக்கு சாதனையாளர் விருது

புதுச்சேரி, நவ.2-

புதுவை பல்கலைக்கழகத்தில் புதுமையான மருந்து வடிவமைப்பு தொடர்பான சர்வதேச மாநாடு கண்டுபிடிப்பு, மொழிபெயர்ப்பு ஆராய்ச்சி மற்றும் பட்டறை குறித்த உலகளாவிய உச்சி மாநாடு நடந்தது. விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபுவுக்கு உயிர் தகவலியல் மற்றும் மருந்து கண்டுபிடிப்பு சங்கம் சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

தொடர்ந்து மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தினகர ராவ் நோக்கவுரை ஆற்றினார். பேராசிரியர் பசந்த் குமார் திவாரி வர்ழ்த்துரை வழங்கினார். இதில் வழக்கமான சிகிச்சைகளும், புற்றுநோய் எதிர்ப்பை சமாளிப்பதற்கான புதுமையான அணுகுமுறைகள் என்ற தலைப்பில் புத்தகம் வெளியிடப்பட்டது.

முன்னதாக உயிர் தகவலியல் துறை தலைவர் கிருஷ்ணா வரவேற்றார். இதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக உயிர் தகவலியல் துறை, உயிர் தகவலியல் மற்றும் மருந்து கண்டுபிடிப்பு சங்கத்தினர் செய்திருந்தனர். முடிவில் அமைப்பு செயலாளர் டாக்டர் மோகனே கோமரின் நன்றி கூறினார்.